# Child Guidance and Counselling Centre



## Paper clippings

TIRUCHIRAPALLI
THE HINDU • THURSDAY, OCTOBER 22, 2009

### TIRUCHI TODAY

**• RELIGION**

**Sri Varasiddhi Vinayagar Temple, Thiruvanaikovil:** Kanda sashti mahotsavam, Shalavarana pooja, Palani Murugan alangaram, 5 p.m.
**Sri Sringeri Sankara Mutt:** Kanda Sashti Mahotsavam, Sri Subramanya Aavarna pooja, Amma Mandapam Road, Srirangam, 9 a.m.; deeparadhana, 10.30 a.m.; laksharchanai, 8 p.m.
**Sri Ramana Bhagavan Spiritual Centre:** Lecture on 'Sama Veda Prarthanaigal,' by Bharathiputhiran, Udayalakshmi Apartmetns, Srirangam, 6.15 p.m.
**Sri Vishnu Sahasranama Parayana Sabha:** Sahasranama parayanam, Hayagreevar Sannidhi, Sankar Nagar, Srirangam, 6.30 p.m.

**• GENERAL**

**Electronics Corporation of Tamil Nadu and District Administration:** Laying of foundation stone for IT Park building, Inauguration of Tiruverambur Revenue taluk and new government buildings and distribution of welfare assistance by M.K.Stalin, Deputy Chief Minister, K.N.Nehru, Transport Minister, presides, D.Napoleon, Union Minister of State for Social Justice and Empowerment, N.Selvaraj, Forest Minister, Poongothai, IT Minister, P.W.C.Davidar, IT Secretary, Santhosh Babu, Managing Director, ELCOT, and T.Soundiah, Collector, speak, Navalpattu, 4.30 p.m.
**Golden Rock Central Railway Workshop:** Flagging off of first 2400 HP Cape Gauge Loco to Mozambique by Praveen Kumar, Member, Mechanical, Railway Board, M.S.Jayanth, General Manager, Southern Railway, V.Carmelus, Chief Mechanical Engineer, Southern Railway, and J.Digi, Chief Workshop Manager, speak, 10.50 a.m.
**Bharathidasan University Department of Social Work:** Inauguration of Child Guidance and Counselling Centre and workshop on Mental Health of School Students, M.Ponnavaikko, Vice Chancellor, chief guest, K.Swaminathan, Chief Educational Officer, delivers key note address, Khajamalai campus, 10.30 a.m.
**M.A.M.College of Engineering, Siruganur:** Workshop on Emerging Trends in Advertising, M.Ramesh Prabha, Managing Director, Galaxy Communications Services, resource person, M.A.Maluk Mohammed, principal, presides, 9 a.m.
**Urumu Dhanalakshmi College Department of Social Work:** Group project on Global Warming, C.Anitha, lecturer, Seethalakshmi Ramaswamy College, resource person, St.Little flower Higher Secondary School campus, Kattur, 11 a.m.; Awareness programme on Abolition of Violence, Kamaraj Nagar, Ariyamangalam, 3 p.m.
**Jamal Mohammed College Department of Tamil:** Samsudeen Endowment lecture by P.M.Mansure, principal, M.I.E.T.Arts and Science College, M.Sheik Mohammed, principal, presides, 10.30 a.m.

THE NEW INDIAN EXPRESS

**Bharathidasan University:** Dept of Social Work, Inauguration of 'Child Guidance and Counselling Centre' and Workshop on 'School Mental Health' by Dr M Ponnavaikko, Vice-Chancellor, Dr K Swaminathan, Chief Educational Officer, Tiruchy District, delivers keynote address, Khajamalai, 10.30 am. / Valediction of Workshop on 'School Mental Health' by Dr V Sujatha, Principal, Cauvery College for Women, Dr P Ilango, Professor and Head, Dept of Social Work, BARD, presides, Khajamalai, 3.45 pm.



தினத்தந்தி திருச்சி 23–10–2009 13

பள்ளி பருவத்தில் மாணவர்களுக்கு

### சரியான வழிகாட்டுதல் இல்லாவிட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிடும்

#### மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பேச்சு

திருச்சி, அக்.23– பள்ளி பருவத்தில் மாணவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் இல்லாவிட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிடும் என்று மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி சுவாமிநாதன் கூறினார்.

**கருத்தரங்கு**

**மன அழுத்தம்**

**முதியோர் இல்லங்கள்**

**வழிகாட்டுதல்**

**4 முதல் 17 வயது வரை**

14 தினகரன்
திருச்சி 29 அக்டோபர் 2009

பாரதிதாசன் பல்கலை.யில்

# மாணவர்களின் பிரச்னைகள் தீர்க்க ஆலோசனை மையம்

திருச்சி, அக். 29: பாரதிதாசன் பல்கலைக்கழக சமூகப்பணித்துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கான ஆலோசனை மையம் துவக்க விழா காஜாமலை வளாகத்தில் நடந்தது.

பல்கலைக்கழக சமூகப்பணித்துறையை சேர்ந்த இளங்கோ வரவேற்றார். சமூகப்பணித்துறை உதவி பேராசிரியர் ஜெரிடா ஞானஜேன் எல்ஜோ அறிமுக உரையாற்றினார். மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி சுவாமிநாதன் பங்கேற்றார். துணைவேந்தர் பொன்னவைக்கோ பேசுகையில், பள்ளி மாணவர்களின் மனநலத்தை பேணிக் காப்பது முக்கியம். அண்மை காலமாக ஊரக பகுதியில் இளைய சமுதாயத்தினருக்கு வழிகாட்டும் முயற்சி எதுவும் நடக்கவில்லை. எல்கேஜி படிக்கும் போதே அவர்களுக்கு நல்ல எண்ணம், பழக்கவழக்கங்களை வளர்க்க பயிற்சியளிக்க வேண்டும் என்றார்.

மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி சுவாமிநாதன் பங்கேற்றார். பாதிக்கப்படும் பள்ளி மாணவர்களின் மன அழுத்தத்திற்கான நிரந்தர சிகிச்சை மையத்தை துணை வேந்தர் பொன்னவைக்கோ திறந்து வைத்தார். இம்மையத்தில் பல்வேறு பாதிப்பிற்குள்ளாகும் 4 முதல் 17 வயதுள்ள மாணவர்களுக்கு தடுப்பு முறைகள் மற்றும் தீர்வுகள் வழங்கப்படுகிறது.

தினமலர். திருச்சி 23-10-2009 4,5

# நல்ல ஆலோசனைகளால் மோசமான மாணவர்களையும் திருத்த முடியும்

## முதன்மைக் கல்வி அலுவலர் உறுதி

திருச்சி, அக். 23-

மிக மோசமான மன நிலையில் உள்ள மாணவர்களையும் நல்ல ஆலோசனைகள் மூலம் ஆசிரியர்களால் திருத்த முடியும் என்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சுவாமிநாதன் கூறினார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் சமூகப்பணித்துறை சார்பில் குழந்தைகள் ஆற்றுப்படுத்துதல் மற்றும் ஆலோசனை மைய திறப்பு விழா மற்றும் பள்ளிக் குழந்தைகள் மனநலம் பற்றிய ஒருநாள் பணிபட்டறை காஜாமலை வளாகத்தில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடந்தது.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணை வேந்தர் பொன்னவைக்கோ பணிப்பட்டறையை தொடங்கி வைத்து பேசுகையில், ''ஊரகப் பகுதிகளில் உள்ள இளைய தலைமுறையினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை வழங்கவும், வழிகாட்டவும் எந்த வசதியும் இல்லை. அதனால்தான் பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் இந்த குழந்தைகள் ஆற்றுப்படுத்துதல் மற்றும் ஆலோசனை மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட 8 மாவட்டங்களிலும் மாணவர்களுக்கான ஆலோசனை மையங்கள் தொடங்கப்பட உள்ளன.

மேலும் பல்கலைக்கழகம் சார்பில் இளைஞர்களின் மேம்பாட்டிற்கான சுய வேலை வாய்ப்பு மற்றும் தொழிற் பயிற்சிகள் உள்ளிட்டவையும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கடந்த 8 ஆண்டுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் பயன் அடைந்துள்ளனர். இளைய தலைமுறையினரை நல்ல வழியில் கொண்டு சென்றால்தான் சிறந்த எதிர்காலத்தை பெற முடியும். அதனால் இத்தமையங்கள் போன்றவற்றின் மூலம் அனைவரும் இளைய தலைமுறைக்கும், நாட்டிற்கும் நல்ல எதிர்காலத்தை அமைக்கும் வகையில் வழிகாட்ட வேண்டும்'', என்றார்.

திருச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சுவாமிநாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு பேசுகையில், ''குழந்தைகள் எந்த சூழ்நிலையில் வளர வேண்டும் என்று தெரிந்து கொண்டு அதன் அடிப்படையில் நன்றாக வளர்த்தால்தான் அவர்களின் எதிர்காலம் நன்றாக அமையும். ஆனால் தற்போது தமிழகத்திலும், நம் நாட்டில் அதுபோன்ற சூழ்நிலைகள் முழுமையாக இல்லை.

இதனால் குழந்தைகள் வீட்டில், பள்ளிகளில், நண்பர்களுடன் பழகும் போதும், வெளிப்புறங்களிலும் பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாகின்றனர். இதனால் அவர்கள் மன அளவில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே இப்பிரச்னைக்கு உரிய தீர்வை உடனடியாக காண வேண்டும். பல குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர்களே பிரச்னையாக உள்ளனர். அதுபோன்ற சில பெற்றோர்கள் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் குழந்தைகள், மாணவர்களின் உளவியல் ரீதியான பிரச்னைகளுக்கு உரிய கவுன்சலிங் இல்லை. எனவே பல்வேறு சூழ்நிலைகளில் பிரச்னைகளுக்கு ஆளாக்கப்பட்டு மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். பல இடங்களில் மாணவர்கள் தற்கொலை கூட செய்து கொள்கின்றனர். இது போன்ற பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு காணுவது மிக மிக அவசியம்.

விரைவில் திருச்சியில் நடைபெற உள்ள தலைமை ஆசிரியர் கூட்டத்தில் 'மாணவர்களும், உளவியல் ரீதியான பிரச்னைகளும்' என்ற தலைப்பில் கருத்தரங்கமும் நடைபெற உள்ளது. எனவே பிரச்னைகள் குறித்தும், அதற்கான தீர்வுகள் குறித்தும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். மோசமான மன நிலையில் உள்ள மாணவர்களையும் நல்ல ஆலோசனைகள் மூலம் ஆசிரியர்களால் திருத்த முடியும்'', என்றார்.

குழந்தைகள் ஆற்றுப்படுத்துதல் மற்றும் ஆலோசனை மைய ஒருங்கிணைப்பாளர் பேராசிரியை ஜெரிடா ஞானஜேன் எல்ஜோ, பேராசிரியர்கள், சுவீடன் நாட்டு சமூகப் பணித்துறை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக சமூகப்பணித்துறை தலைவர் பேராசிரியர் இளங்கோ வரவேற்றார். மாணவர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.